# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2308/29 - 2022 දෙසැම්බර් මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.12.01

*2308/29 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978(X)(ஆ)*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 66705 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான காட்சு (KAATSU) - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னோலொஜி டிறெயினிங் சென்ரர் (பிறைவேட்) லிமிடெட் (KIU) தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2022, பெப்புருவரி 25 ஆந் திகதிய 2268/89 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இலும் மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படும் "முகாமைத்துவத் தகவல் முறைமையில் விஞ்ஞான இளமாணி சிறப்பு" என்னும் பதிவை உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன்கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை I**

*நிபந்தனைகள்*

*1.* காட்சு (KAATSU) - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னோலொஜி டிறெயினிங் சென்ரர் (பிறைவேட்) லிமிட்டெட் (KIU) ஆனது, குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் பூர்த்தி செய்யக்கூடிய வியாபாரப் பகுப்பாய்வில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்-

(அ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த (உயர் தரத்தில்) வர்த்தகப் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் ; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கைநெறியுடன் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் ஒரே மற்றும் அதே அமர்வில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S).

*2.* காட்சு (KAATSU) - ஹய்லி அட்வான்ஸ்ட் மெடிகல் டெக்னோலொஜி டிறெயினிங் சென்ரர் (பிறைவேட்) லிமிட்டெட் (KIU) ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| **நிரல் I**<br>*பட்டம்* | **நிரல் II**<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| வியாபாரப் பகுப்பாய்வில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி | பிஎம்ஜிரி சிறப்பு (வியாபாரப் பகுப்பாய்வு) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2022*, நவெம்பர் *23*.

EOG *12-0016/1*

---

*ச.வ.பி.21/1978*(X) (ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978* ஆம் ஆண்டின் *16* ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் *25*அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் *27(1)*(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர், கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், *2007* ஆம் ஆண்டின் *7*ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் பீவி *101137* ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான எஸ்எல்ரி கம்பஸ் (பிறைவேட்) லிமிடட் தொடர்பில் மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் *70*இ என்னும் பிரிவின்கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, *2021*, சனவரி மாதம்*13* ஆந் திகதிய *2210/18* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் சிவில் பொறியியலில் சிறப்பு பொறியியல் விஞ்ஞான இளமாணி பட்டத்தை அளிப்பதற்கு இட்டுச் செல்கின்றதாக உயர் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக அதனைப் பட்டம் அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரித்து, அட்டவணை I இலுள்ள நிபந்தனை *2* இல் காணப்படுகின்ற "குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்துகின்றேன்:-

"குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேணடும்:

*ஆயின் எவ்வாறாயினும், 07.05.2015 இலிருந்து தொடங்கி 10.01.2018 இல் முடிவுற்ற காலப்பகுதியினுள் (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதும் பீவி 64641 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான கம்பனியொன்று) சவுத் ஏசியன் இன்ஸ்ரிரியுற் ஒப் ரெக்னோலொஜி அன்ட் மெடிசின் (பிறைவேட்) லிமிட்டெட்டுடன் (SAITM) சிவில் பொறியியலில் சிறப்பு பொறியியல் விஞ்ஞான இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்வதற்கு பதிவு செய்திருக்கின்ற மாணவர்கள், இதனகத்துள் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச நுழைவுத் தகைமையை அத்தகைய மாணவர்கள் கொண்டிருப்பார்களாயின், இதனகத்துள் குறிப்பிடப்பட்ட சிவில் பொறியியலில் கௌரவ பொறியியல் விஞ்ஞான இளமாணியுடன் தொடர்புடைய பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக அனுமதிக்கப்படுவதற்கு தகுதியுடையவர்களாதல் வேண்டும்.".*

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2022, நவெம்பர் 22.*

EOG *12-0016/2*

---

*ச.வ.பி.21/1978*(X)(ஆ)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர், கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் பீவி 101137 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான எஸ் எல் ரி கம்பஸ் (பிறைவேட்) லிமிடட் தொடர்பில் மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின்கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, 2020, சனவரி மாதம் 6 ஆந் திகதிய 2157/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் எந்திரமின்னணுவியல் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி பட்டத்தை அளிப்பதற்கு இட்டுச்செல்கின்றதாக உயர் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக அதனைப் பட்டம் அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரித்து, அதன் அட்டவணை* I *இல் நிபந்தனை 1 இன் பந்தி* (ii) *இல் காணப்படுகின்ற "வேண்டும்." என்னும் சொல்லுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்துகின்றேன்:-*

"வேண்டும்:

*ஆயின் எவ்வாறாயினும், 07.05.2015 இலிருந்து தொடங்கி 10.01.2018 இல் முடிவுற்ற காலப்பகுதியினுள் (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதும் பீவி 64641 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான கம்பனியொன்று), சவுத் ஏசியன் இன்ஸ்ரிரியுற் ஒப் ரெக்னோலொஜி அன்ட் மெடிசின் (பிறைவேட்) லிமிட்டெட்டுடன்* (SAITM) *எந்திர மின்னணுவியல் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்வதற்கு பதிவு செய்திருக்கின்ற மாணவர்கள், இதனகத்துள் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச நுழைவுத்தகைமையை அத்தகைய மாணவர்கள் கொண்டிருப்பார்களாயின், இதனகத்துள் குறிப்பிடப்பட்ட எந்திரமின்னணுவியல் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான பொறியியல் இளமாணியுடன் தொடர்புடைய பட்ட நிகழ்ச்சிக்காக அனுமதிக்கப்படுவதற்கு தகுதியுடையவர்களாக்கப்படுதல் வேண்டும்.".*

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2022, நவெம்பர் 23.*

EOG *12-0016/3*

*ச.வ.பி. 21/1978(X)(டி)*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின்16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 94125 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் களனி, பொலேகல்ல, மானெல்வத்தவில் அமைந்துள்ளதுமான நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் வோர் புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (NIIBS) தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2022, ஒற்றோபர் 10 ஆந் திகதிய 2301/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இலும் மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படும் "தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளமாணி சிறப்பு" என்னும் பதிவை உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை I**

*நிபந்தனைகள்*

*1. நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் வோர் புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (NIIBS) ஆனது, குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் பூர்த்தி செய்யக்கூடிய மானுடவியலில் கௌரவ இளங்கலைமானி மற்றும் பிரயோகத் தொடர்பாடல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பவியலில் கௌரவ இளங்கலைமானி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளாக அமைந்தொழுகுதல் வேண்டும்-*

*2. நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் வோர் புடிஸ்ட் ஸ்டடிஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (NIIBS) ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.*

**அட்டவணை II**

| **நிரல் I**<br>*பட்டம்* | **நிரல் II**<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| மானுடவியலில் இளங்கலைமாணி சிறப்பு | பீஏ சிறப்பு (மானுடவியல்) |
| பிரயோகத் தொடர்பாடல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பத்தில் இளங்கலைமாணி சிறப்பு | பீஏ சிறப்பு (பிரயோகத் தொடர்பாடல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பம்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2022, நவெம்பர் 23.*

EOG *12-0016/4*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.